செய்தி வெளியீடு எண் :888 நாள் : 11.05.2023

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில், குறிப்பிடப்பட்ட பகுதியின் மொத்த மக்கள்தொகையில் 50 விழுக்காட்டிற்கும் கூடுதலாக பட்டியலின மற்றும் பழங்குடியினரின் மக்கள்தொகை கொண்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பணிக்கும், பொதுமக்களின் குறைந்தபட்ச பங்களிப்புத் தொகையினை, பணி மதிப்பீட்டுத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு, அதாவது 20 விழுக்காடு என்ற அளவிற்கு குறைத்து ஆணையிட்டுள்ளார்கள்.**

*****

அரசு, சமுதாய உட்கட்டமைப்புகளை உருவாக்குவதிலும், பராமரிப்பதிலும் பொதுமக்களின் சுயஉதவி நடைமுறையை மேம்படுத்தவும் மற்றும் பங்கேற்பினை அதிகரிக்கும் நோக்கத்திற்காக, நமக்கு நாமே திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் 13.09.2021–ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.71–ல், வெளியிடப்பட்டுள்ளன.

நமக்கு நாமே திட்டத்தின் கீழ், நீர் நிலைகளை சீரமைத்தல், பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களை நிறுவுதல், மேம்பாடு செய்தல் மற்றும் சீரமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல், மரங்கள் நடுதல், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களுக்கு பயன்படும் கட்டிடங்கள் ஆகியவற்றை கட்டுதல் மற்றும் சீரமைத்தல், பொது நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள், பாலங்கள், சிறு பாலங்கள், புதிய தகனமேடைகள், மழைநீர் வடிகால்கள், மண் சாலைகளை அனைத்து பருவகாலங்களுக்கேற்ற சாலைகளாக, அதாவது தார் சாலைகள், சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக தரம் உயர்த்துதல், பொது மற்றும் சமுதாய கழிவறைகள், சந்தைகள், கடைகள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நீர்நிலை புனரமைப்பு பணிகள் தவிர்த்து மற்ற பணிகளுக்கு பொது மக்களின் குறைந்தபட்ச பங்களிப்பானது, பணி மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்காகும். நீர்நிலை சீரமைப்பு பணிகளுக்கு பொது மக்களின் குறைந்தபட்ச பங்களிப்பானது, பணி மதிப்பீட்டுத் தொகையில் 50 விழுக்காடு ஆகும். பொது மக்கள் பங்களிப்பிற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை.

அரசு, நமக்கு நாமே திட்டத்தின் கீழ், கடந்த இரண்டாண்டுகளில், மொத்தம் ரூ.350.00 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது, மேலும், இதற்கான பொதுமக்களின் பங்களிப்புத் தொகை ரூ.151.77 கோடி ஆகும். இத்திட்டத்தின் கீழ், கடந்த இரண்டாண்டுகளில் மொத்தம் 2,568 பணிகள் எடுக்கப்பட்டு, 1,446 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 07.01.2022 அன்று சட்டப்பேரவையில் உரையாற்றியபோது, "நமக்கு நாமே திட்டத்தின் கீழ் உள்ள மூன்றில் ஒரு பங்கு மக்களுடைய பங்கு என்பதை பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஐந்தில் ஒரு பங்கு" என விதிகள் தளர்த்தப்படும் என அறிவித்துள்ளார்கள்.

இதன்படி, நமக்கு நாமே திட்டத்தின் கீழ், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில், குறிப்பிடப்பட்ட பகுதியின் மொத்த மக்கள்தொகையில் 50 விழுக்காட்டிற்கும் கூடுதலாக பட்டியலின மற்றும் பழங்குடியினரின் மக்கள்தொகை கொண்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பணிக்கும், பொதுமக்களின் குறைந்தபட்ச பங்களிப்புத் தொகையினை, பணி மதிப்பீட்டுத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு, அதாவது 20 விழுக்காடு என்ற அளவிற்கு குறைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எனினும், பொதுமக்கள் பங்களிப்பிற்கான உச்சவரம்பு ஏதுமில்லை. இதனடிப்படையில், திட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கை, பட்டியலின மற்றும் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அதிகளவிலான பொதுமக்களின் பங்கேற்பினை ஊக்குவித்து, இப்பகுதிகளுக்கு அதிகளவில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ஏதுவாக அமையும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**
**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in